**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 3/2019**

PW1 – வினோத்குமார் த/பெ குஷல்சந்த் ஜெயின்
நாள்– 09.01.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

அசல் வழக்கை என் தகப்பனார் தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார் தாக்கல் செய்த வழக்குரையை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்றால் சரிதான். வழக்கு விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து வாய்க்காங்கரை தெருவில் மேற்குபுறம் அமைந்துள்ளது என்றால் சரிதான். தார் சாலைக்கும் எனது வீட்டிற்கும் படி தவிர வேறு இடம் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளின் வீடு ரோட்டிலிருந்து 15 அடி இடைவெளி விட்டு தான் அமைந்திருந்தது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் வீட்டின் முன்பகுதியிலுள்ள 15 அடி இடமானது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2-ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் பலராமன் என்றால் சரிதான். நாங்கள் தாவா சொத்தை விலைக்கு வாங்குவதற்கு முன்பே பிரதிவாதிகளின் வீடு இருந்தது என்றால் சரிதான். எங்கள் வீடு 3 தளங்களை கொண்டது என்றால் சரிதான். 3 தளங்களும் மெட்ராஸ் தார்ஸ் தளங்கள் என்றால் சரிதான். ஏற்கனவே கட்டப்பட்டிருந்த வீட்டை தான் நாங்கள் விலைக்கு பெற்றோம் என்றால் சரியல்ல. நாங்கள் விலைக்கு பெறும்போது தரை தளமும், முதல் தளம் மட்டும் இருந்தது. 2-ம் தளம், 3-ம் தளம் நாங்கள் விலைக்கு வாங்கிய பிறகு கட்டியது.

தரை தளத்தையும், முதல் தளத்தையும் 3 ஆவணங்களின் கீழ் எனது பாட்டியான பாரஸ்பாய் என்பவரால் விலைக்கு பெறப்பட்டது என்றால் சரிதான். ஒரே சொத்தை 3 ஆவணங்களின் கீழ் விலைக்கு பெற்றதற்கான

காரணம் உண்டா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 3 ஆவணங்களின் கீழ் விலைக்கு பெற்ற சொத்தை எனது பாட்டி எனது தகப்பனாருக்கு உயில் மூலம் பாத்தியம்படுத்திவிட்டார் என்றால் சரிதான். 2-ம் தளம் மற்றும் 3-ம் தளம் எனது தகப்பனாரால் கட்டப்பட்டது என்றால் சரிதான்.

தாவா சொத்தைப் பொறுத்து எனது தகப்பனார் எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்து விட்டதால் 2 முதல் 7 வாதிகளுக்கு வாரிசுப்படி பாத்தியப்பட்டதாகும். எனது தகப்பனாரின் இறப்பிற்கு பிறகு தாவா சொத்தை பாகம் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான் . நான் இதர வாதிகளுக்காகவும் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அவர்களுக்கென்று தனிப்பட்ட கட்சி இல்லை என்றால் சரிதான்.

3-ம் தளத்தில் விழும் மழைத் தண்ணீர் ரோடு பக்கம் தண்ணீர் விழும் வகையில் உள்ளது என்றால் சரியல்ல. மழைநீர் சேகரிப்பின் மூலம் வீட்டின் முன் பகுதியில் வெளியேறுகிறது. எனது வீட்டின் மீது விழும் மழைத் தண்ணீர் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு இடையூறு இருக்ககூடாது என்பதற்காகத்தான் மழைநீர் சேமிப்பு திட்டம் படி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது என்றால் சரிதான். எங்கள் வீட்டின் தென்புறமும், வடபுறமும் மழைத்தண்ணீர் வெளியேறுவதற்கு இடமில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.11 , வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13 ஆவணம் ஏற்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆனது வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13-ன் மூலப்பத்திரம் என்றால் சரிதான்.

தாவா சொத்தின் பழைய புல எண் 393/7 என்றால் சரிதான். வா.சா.ஆ.14-ல் கண்டுள்ள அளவுகளின்படி தான் நாங்கள் கிரயம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். எனது பாட்டி கிரயம் பெற்ற 3 ஆவணங்களிலும் தெற்குபுறம் பலராமன் சொத்து இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பலராமன் வீட்டு தோப்பிற்கு வடக்குபுறம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளது வெளிச்சம் மற்றும் காற்றை தடை செய்யக்கூடாது என்று தான் கோரியுள்ளோம் என்றால் சரிதான். எனது

வீட்டிற்கு தெற்கு பகுதியில் உள்ள சந்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

தாவா சொத்தின் தரை தளத்தில் ரோடு பகுதியில் அடகு கடை வைத்து தொழில் செய்து வருகிறோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள அடகுக்கடையானது எங்களுடையதுதான் என்றால் சரிதான். **அந்த புகைப்படமானது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது அடகுக்கடைக்கு முன்பகுதியில் ஷெட்டர் போட்டுள்ளோம் என்றால் பாதுகாப்புக்காக அமைத்துள்ளோம். தாவா சொத்தின் வடபுற சுவற்றில் மொத்தம் சுமார் 30 ஜன்னல் இருக்கும் என்றால் சரிதான்.

மேற்படி 30 ஜன்னல்களுக்கும் சன்சைடு இல்லை என்றால் சரியல்ல. வடபுறம் எங்களுக்கு போதுமான வெளிச்சமும், காற்றும் கிடைக்கிறது என்றால் சரியல்ல. கீழ் தளத்தில் உள்ள அடகு கடையின் வடபுற ஜன்னல்களை நாங்கள் திறப்பதில்லை என்றால் சரியல்ல. அடகு கடையில் ஜன்னல்கள் கிடையாது. அடகு கடையில் முன்புறத்தில் ஜன்னல் உள்ளது . அதை திறந்து வைத்துள்ளோம் என்றால் சரிதான். ஜன்னல்களுக்கு இரும்பு கம்பி பாதுகாப்பிற்காக அமைத்துள்ளோம் என்றால் சரிதான். ஜன்னலின் அளவு சுமார் 10 x 6 அடி அளவில் உள்ளது என்றால் அளவு பற்றி எனக்கு தெரியாது.

அடகு கடையின் தென்புற சுவற்றில் ஜன்னல் உள்ளது என்றால் சரிதான். பகல் நேரங்களில் மேற்படி ஜன்னலை திறந்து வைத்திருப்போம் என்றால் சரிதான். அடகு கடையிலுள்ள தென்புற ஜன்னல் மீது நடைபாதையில் இரும்பு கூரை அமைத்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் அமைத்துள்ள இரும்பு கூரையினால் தான் தென்புறத்திலிருந்து எங்களுக்கு காற்று மற்றும் வெளிச்சம் கிடைப்பதில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள 3 தளத்திலும் சேர்ந்து தென்புற சுவற்றில் சுமார் 30 ஜன்னல் இருக்கும் என்றால் சரிதான். தென்புறம் சுவற்றில் உள்ள ஜன்னல்களில் முன்புறம் உள்ள பகுதிகளில் உள்ள ஜன்னல்கள் தவிர பின்புறத்திலுள்ள ஜன்னல்களுக்கு சன்சைடு இல்லை என்றால் சரியல்ல.

முன்புறத்தில் எத்தனை சன்சைடு உள்ளது என்றால் 4 சன்சைடு உள்ளது. இதர உள்ள ஜன்னல்களுக்கு சன்சைடு இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் வீட்டின் கார்னீஷ் பகுதி எனது வீட்டின் சுவர் வரை உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளவாறு தான் உள்ளது என்றால் சரிதான். **அது பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரதிவாதி அவரது வடபுறம் உள்ள சந்தை யாரும் பயன்படுத்தாதவாறு கேட் அமைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த சந்து பகுதியில் பிரிதிவாதி இரும்பு சீட்டு அமைத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் தான் பிரதிவாதி அமைத்துள்ள கேட் மற்றும் ஷீட் பகுதி என்றால் சரிதான். **அது பி.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

தாவா சொத்தை நான் எப்போது கடைசியாக பார்த்தேன் என்றால் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள ஜன்னல்களுக்கு சன்சைடு இல்லை என்றால் சரிதான். **அது பி.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது பாட்டி கிரயம் வாங்கிய 3 ஆவணங்களிலும் தென்புறத்திலும் சன்சைடு உள்ளதாகவோ, சன்சைடு வைத்துக்கொள்ள உரிமை உள்ளதாகவோ குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்கள் கிரயம் முன்னோர்கள் வழக்கறிஞர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் கிரய முன்னோரும் வழக்கறிஞர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பாட்டி எப்போது இறந்தார் என்றால் 2007-ல் இறந்தார். எனது பாட்டி உயிருடன் இருந்த காலத்தில் பிரதிவாதிகளுக்கு எதிராக காற்று, வெளிச்சம் கோரி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அப்போது பிரச்சனை இல்லை என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை.

1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.